# C.S.I TAMIL CHURCH - OMAN

# "பாலைவன மன்னா"




**மன்னா – 11 ஜூன் 2021 பிரதி – 3**



# ஆயர் மடல்



இரக்கத்தில் ஐசுவரியவராம் இறை இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

பிரியமானவர்களே! புதிய மாதத்தில் கடந்து வந்துள்ளோம். இம்மாதம் ஆண்டவர் நமக்கு இரக்கமாய் தந்த மாதம் என்பதை உணர்வோம். இன்னல்களும், இழப்புகளும், இகழ்ச்சிகளையும் சந்தித்துக்கொண்டிருக்கும் உலக சூழலில் இனிதாய், ஈவாய், இரக்கமாய் பெற்ற புதிய மாதத்தில் நாமும் இரக்கமுடையவர்களாய் இருக்க தீர்மானித்து செயல்படுவோம்.

### பார்வை:-

இறைமக்களாம் நம்முடைய பார்வை கிறிஸ்துவின் மனதுருக்க பார்வையால் மாறட்டும். மனதுருக்கம் நமக்குள் வரட்டும். பாராது செல்லும் தன்மை மறையட்டும். பரமன் நம்முள் வாழ்கிறார் என்னும் உணர்வை நமது பார்வை வெளிக்காட்டட்டும். இதுவே இறையரவரின் நமது விருப்பம்.

### சிந்தை:-

இறை அனுபவத்தோடும் இறை அசைவாடுதலை உணர்த்தும் நமது எண்ணம் உருவாகட்டும். எனது எண்ணம் இறை எண்ணத்தை நிறைவேற்றும் வண்ணமாயுள்ளதா? என உரசிப்பார்ப்போம். எண்ணத்தில் மாற்றமே எல்லாவற்றிலும் மாற்றம் என்பதை அறிவோம். எழுச்சி மிகு, ஏற்றம் மிகு சிந்தை நம்மில் உருவாக்கி இறையாற்றல் பெறுவோம்.

### செயல்:-

இறைதிட்டம் நம்மில் நிறைவேற்றும் செயல்வீரர்களாய் நம் கடமையைத் தொடர்வோம். கடமையை செய்யாதவன் உரிமையை கோரமுடியாது என்பது பழமொழி. சமுதாயத்திற்கு, திருச்சபைக்கு செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றுவோம். பெற்றோருக்கு, குடும்பத்திற்கு செயல்படுத்தவேண்டிய கடமையைச் செய்வோம். இறைத்திட்டம் ஈடேற இனிதாய் உழைப்போம், ஜெபிப்போம், அர்ப்பணிப்போம்.

புதிய மாதத்தில் புதிய ஆற்றலும், ஆலோசனையும், அரவணைப்பையும் கர்த்தர்தாமே நிறைவாய் தந்து வழிநடத்துவாராக. ஆமென்!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

## ஆயர் அருளுரை

## இரக்கம்

**“இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்” மத்தேயு 5:7**




இறை இயேசுவில் பிரியமானவர்களே! இம்மாதம் இரக்கம் என்னும் தலைப்பில் இணைந்து தியானிக்க முயல்வோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மலைப்பொழிவிலே கூறிய இறைவார்த்தைகளில் இரக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக அனைத்து பண்புகளுக்கு மற்றொரு நன்மையைக் கூறும் இயேசு இரக்கத்திற்கு மட்டும் இரக்கமுள்ளவர்கள் இரக்கம் பெறுவார்கள் என குறிப்பிடுகிறார்.

விவசாயி ஒருவர் எள் விதையை எடுத்துக்கொண்டு வயல்வெளிக்கு சென்று விதைத்து பயிர் செய்து காத்திருந்தார். நாட்கள் சென்றபின்பு எள்விதை பயிராகி செடியாகி, பூத்து, காய்த்து எள்ளையே மீண்டும் தந்தன. எதை விதைக்கிறோமோ அதை அறுப்போம். இரக்கமும் அது போன்றதே!

### 1. தலைமுறையாய் வரும் இரக்கம்:-

கர்த்தரின் இரக்கம் ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாத ஒன்று. இந்த இரக்கத்தை நாம் பெற்றுக்கொள்ள திருமறை கூறும் ஆலோசனை லூக்கா நற்செய்தி நூல் 1-ம் அதிகாரம் 50-ம் வசனத்தில் உள்ளது. **“அவருடைய இரக்கம் அவருக்கு பயந்தவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது”**

கர்த்தருக்குப் பயப்பட்டு வாழ்வது மட்டுமே கர்த்தருடைய இரக்கம் பெற வழிவகை செய்யும் என திருமறை உறுதிப்படுத்துகிறது.

உலகப் பிரகாரமான அனைத்துப் பொருட்களையும் பணத்தாலும், அதிகாரத்தாலும் வாங்கிவிடலாம் ஆனால் கர்த்தருடைய இரக்கம் நமது வாழ்விலும், நமது பிள்ளைகளின் பிள்ளைகளின் வாழ்விலும் தொடர வேண்டுமாயின் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தர் நம்மை படைத்தவர், வாழ வைப்பவர், வாழ்வளிப்பவர், வழிநடத்துபவர், நம்மை காண்பவர் நம்மை

அறிபவர் என்னும் உணர்வோடு வாழும்போது தலைமுறையான இரக்கம் பெறுவோம்.

### 2. திரும்புவதால் பெறும் இரக்கம்:-

கர்த்தரிடம் மனந்திரும்பி அவர் ஊழியத்தைப் பெற்றிருப்பதால் இரக்கம் பெற்றிருப்போம் என 2கொரி. 3:16, 4:1-ல் படிக்கிறோம். இப்படி இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்து போவதில்லை எனத் திருமறை கூறுகிறது. காரணம் என்ன என்று நாம் ஆய்வோமாயின் விடை 1பேதுரு 2:10-ல் குறிப்பிடப்படுகிறது.

**“முன்னே நீங்கள் தேவனுடைய ஜனமாயிருக்கவில்லை; இப்பொழுதோ அவருடைய ஜனமாயிருக்கிறீர்கள். முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள்; இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்”**

கர்த்தருடைய ஜனமாயிருக்கையில் நாம் இரக்கம் பெற்றிருப்போம் என திருமறை அழைக்கிறது. எனவே மனந்திரும்பி கர்த்தருடைய ஜனமாய் மாறும்படியாய் ஆண்டவர் நம்மை அழைக்கிறார். லூக்கா நற்செய்தி நூலில் இளைய குமாரனின் வாழ்வு நாம் அறிந்ததே. எப்பொழுது மனந்திரும்பி தந்தையிடம் வந்தானோ அப்பொழுது தந்தையிடமிருந்து உள்ள இரக்கம் அவனை புது வஸ்திரமணிந்து, மோதிரமணிந்து, பாதரட்சைகள் அணிந்து அழகு பார்த்ததே ஒழிய, பழைய தவறுகளை சுட்டிக்காட்டி வேதனைப்படுத்தவில்லை. பிரியமானவர்களே! கர்த்தரிடம் திரும்புவோம். இரக்கம் பெறுவோம்.

### 3. தவறுகளை விட்டுவிடுவதால் இரக்கம்:-

“தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கைச் செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்” நீதி. 28:13

“என்னிடத்தில் அன்புகூர்ந்து என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்” (யாத். 20:6, உபா. 5:10).

“கர்த்தாவே, என்மேல் இரக்கமாயிரும்; உமக்கு விரோதமாய் பாவஞ்செய்தேன், என் ஆத்துமாவை குணமாக்கும் என்று நான் சொன்னேன்” (சங்கீதம் 41:4).

“நாம் நிர்மூலமாகாதிருப்பது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை” (புலம்பல் 3:22).

“எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு” (தானியேல் 9:10).

பிரியமானவர்களே! திருமறையின் தலைவர்கள் தங்கள் அனுபவத்தின் மூலமாய் நமக்கு கற்றுத் தரும் பாடம் கர்த்தரிடத்தில் தவறுகளை அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்பதால் இரக்கம் பெறுகிறோம். நமது வாழ்வில் கர்த்தரின் இரக்கம் மிகவும் இன்றியமையாதது. நாம் நிற்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் கர்த்தருடைய கிருபையே என நமது இயலாமையையும் கர்த்தரின் இரக்கத்தையும் வெளிப்படுத்தி நிற்கிறார்.

இந்தக் கொடிய நாட்களிலும் இறைவனின் இரக்கத்திற்காக இறைஞ்சி நிற்போம். இறை வழிகாட்டுதலைப் பெறுவோம். ஆண்டவர்தாமே நமக்கு இரங்குவாராக! ஆமென்!

**அன்புடன் போதகர்**
**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி

### அறுவடை காலம்



ஒரு சிலந்தி பூச்சி நெற்பயிரின் வயலில் தன் கூட்டைக் கட்டி வாழ்ந்து வந்தது. அந்த கூட்டில் சிறு பூச்சிகளை தன் இரையாக உண்டு தன் காலத்தை சந்தோஷமாக கழித்து வந்தது. ஒருநாள் ஒரு சிறுபூச்சி அதில் மாட்டிக்கொண்டது. சிலந்தி அதை இரையாக்க முயன்றபோது, அந்த பூச்சி சிலந்தியிடம் “நீ என்னை சாப்பிடாமல் விட்டுவிட்டால், நீ உன் உயிரை காப்பாற்றிக்கொள்ளும்படியான ஒரு முக்கிய செய்தியை உனக்கு சொல்லுவேன்” என்றது. சிலந்தி ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு, ‘என்ன செய்தி’ என்று கேட்டது. அதற்கு அந்த பூச்சி, ‘நீ இந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு போய்விடு. அறுவடைக்காலம் வருகிறது’ என்றது.

அப்போது சிலந்தி ‘நீ என்னிடம் கதைவிடுகிறாய், அறுவடை அது இது என்று என்னிடமிருந்து தப்பித்துக்கொள்ள நீ சும்மா ஏதோ கதை விடுகிறாய்’ என்றது. அதற்கு அந்த சிறுபூச்சி, ‘இல்லை, இது உண்மை, நான் சொல்வதைக் கேள், இந்த வயலின் எஜமானர் அறுவடை செய்ய

சீக்கிரம் வரப்போகிறார். ஆகவே இந்த இடத்திலிருந்து நீ வேகமாய் சென்றுவிடு. முதிர்ந்து நிற்கும் அந்த கதிர்களைப் பார், எஜமானர் ஒரு பெரிய மெஷினை கொண்டுவந்து, கதிர்களைக் கொய்வார். அப்போது நீ கொல்லப்படுவாய். ஆகவே நீ போய்விடு' என்று கூறியது.

சிலந்தியோ, 'எனக்கு அறுவடை மீதோ, ஒரு பெரிய இயந்திரம் வந்து அவைகளைக் கொய்து எடுக்கும் என்றோ நம்பிக்கை இல்லை. நான் இங்கு வந்தது முதல் எல்லாம் அப்படியேத்தான் இருக்கிறது, ஒரு மாற்றமும் இல்லை. நான் சந்தோஷமாக காலத்தைக் கழித்து வருகிறேன். உனக்கு அது பொறுக்கவில்லை, நீ சொல்வதை நான் கேட்க விரும்பவில்லை, சும்மா கதை பேசிக்கொண்டு இருக்காதே' என்று சொல்லி இந்த சிறுபூச்சியை இரையாக விழுங்கிவிட்டது. அடுத்தநாள், மழையோ காற்றோ இல்லாமல் சூரியன் உதித்து எல்லாம் நன்றாக இருந்தது. சிலந்தி வலையில் சிக்கிய ஒரு பூச்சியை உண்டுவிட்டு குட்டித் தூக்கம் போட ஆரம்பித்தபோது, ஏதோ ஒரு இயந்திரம் அருகில் வரும் சத்தம் கேட்டது. ஒரு நிமிடத்தில் அதன் கூடும், சிலந்தியும் அழிந்துபோனது.

கர்த்தருடைய வருகையின் நாட்கள் மிகவும் சமீபித்துவிட்டது. ஆனால் உலக மக்களோ எதுவுமே நடக்கப் போவதில்லை என்பதைப்போல் தங்கள் இஷ்டப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 'என்னுடைய சிறுவயதிலிருந்து இயேசு கிறிஸ்து சீக்கிரம் வரப்போகிறாரென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன், இதுவரை வரவில்லை, என்னுடைய பிள்ளைகளும் இதோ கிறிஸ்து வரப்போகிறார் என்பதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், ஒருவேளை எல்லாமே கட்டுக்கதையோ' என்று நினைப்பவர்களும் உண்டு. தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தை குறித்து தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனம் திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார். அதை உணராமல், கிறிஸ்து எங்கே வரப்போகிறார் என்று நிர்விசாரமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஏராளம் ஏராளம். கர்த்தர் சொன்ன வார்த்தைகளுக்கு நாம் கீழ்ப்படிந்து அவருடைய வருகைக்கு நாம் ஆயத்தப்படவேண்டியது மிகவும் அவசியமல்லவா? நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவோம், அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம்.

கர்த்தரின் வருகை மிகவும் சமீபமாயிருக்கிறது. மாரநாதா! ஆமென் அல்லேலூயா!

முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில்: கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றம் முதல் இருந்தவிதமாய் இருக்கிறதே என்று சொல்லுவார்கள். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார் - 2பேதுரு 3:4,9

**அன்புடன் போதகர்**

## மகளிர் பகுதி

## கர்த்தாவே இரங்கும்

“எது வரைக்கும்” கர்த்தாவே, எது வரைக்கும் இரங்காதிருப்பீர். – (சங். 6:3).

இரக்கத்தில் ஐசுவரியமுள்ள ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

மனித இரக்கத்தை எதிர்நோக்கியிருக்கும் காலத்தில் கர்த்தருடைய இரக்கத்திற்காய் ஜெபிப்பதும், காத்திருப்பதும் நல்லது. நாம் சந்திக்கின்ற நிகழ்வுகளில் சோர்ந்துபோகாமல் தேவ இரக்கத்திற்காய் பெண்களாகிய நாம் காத்திருப்போமானால் கர்த்தர் நம்மை நடத்துவார்.



அவசரமான ஒரு வேலைக்காக இரண்டு பேர் வேகவேகமாக நடந்து போய் கொண்டிருந்தனர். திடீரென மழை வந்துவிட்டது. இரண்டுபேரும் ஒரு கடையோரம் மழைக்கு ஒதுங்கினார்கள். அவர்களில் ஒருவர், என்ன இது, இந்த நேரம் பார்த்து மழை வந்துவிட்டதே! என சலித்து கொண்டார். இன்னொருவரோ மழை பெய்வது சகஜமானது. ஆனால் இது எவ்வளவு நேரம் பெய்யப்போகிறதோ தெரியவில்லையே என்று அங்கலாய்த்துக்கொண்டார்.

மனித வாழ்க்கையிலும் துன்பங்களும், கஷ்டங்களும், பிரச்சனைகளும் சகஜமானதே. ஆனால் வந்துவிட்ட கஷ்டங்களும், சோதனைகளும் எவ்வளவு காலம் இப்படியே தொடரப்போகிறது? என்ற கேள்விக்கு விடை தெரியாமல் போகும்போதுதான் சலிப்பும், பயமும், சோர்வும், நம்பிக்கை இழப்பும், மனத்தளர்வும் ஏற்பட்டு விடுகிறது.

### முடிவு:-

கர்த்தர் சொல்லியிருக்கிற கர்ப்பத்தின் கனியை கண்களால் காண இனியும் எதுவரைக்கும் என்ற கேள்வி ஆபிரகாமிற்கு நிச்சயம் தோன்றியிருக்கும். எத்தனை காலம் இந்த அந்நிய நாட்டில் சிறை கைதியாக முடங்கி கிடப்பது என்ற கேள்வி யோசேப்பிற்கு கட்டாயம் ஏற்பட்டிருக்கும். மனநிலையும், உடல்நிலையும் பாதிக்கப்பட்டு எதுவரைக்கும் வியாகுலப்பட்டு கொண்டிருப்பது என்ற கேள்வி யோபிற்கு நிச்சயம் எழுந்திருக்கும். ஆனால் எதுவரைக்கும் என்ற கேள்விக்கு அவர்கள் ஒரு முடிவைக் கண்டனர். எதுவும் அப்படியே எந்நாளும் தொடர்ந்து விடப்போவதில்லை. தேவன் மேல் நம்பிக்கை வைத்து அவரை சார்ந்து கொண்டு வாழ்கின்றவர்கள் தங்கள் துன்பங்களுக்கு ஒரு முடிவை காணாமல் போய்விடுவதில்லை. இன்றும் கொடிய வைரஸ் தாக்கம், அலைகள் எதுவரைக்கும் என சிந்தித்துக்கொண்டு பயத்தோடு இருக்கிறோமா? கலங்காதிருங்கள். சீக்கிரமாகவே ஒரு முடிவு உண்டு என்று தேவனாகிய கர்த்தர் உரைக்கிறார் என்பதை விசுவாசத்தோடு பிடித்துக்கொள்வோம்.

### பொறுப்பு:-

இரவு எத்தனைதான் இருள் நிறைந்ததாக இருந்தாலும் வெளிச்சம் வீசும் பகல் வராமல் போவதில்லை. எது வரைக்கும் இந்த துன்பம் தொடரப்போகிறது? என்ற கேள்விக்கு விடை காண்பது கடினம். ஆனால் தேவன் அவைகளை அறிவார். சில சூழ்நிலைகளில் அந்த கேள்விக்கு விடை காணும் பொறுப்பு நம்மிடமே இருக்கும். அவற்றில் ஒரு சிலவற்றை நாம் காண்போம். சில துன்பங்களுக்கு வேறு யாரும் அல்ல, நாம்தான் காரணம். தவறான முடிவுகள், தவறான குணங்கள், தவறான ஆலோசனை, தேவனை சார்ந்து செயல்படாமை போன்றவையும் துன்பங்கள் நீங்காமல் தொடர வழி வகுக்கும். இவைகளை உணர்ந்து திருத்திக் கொள்ளவும், தவறுக்காக மனம் வருந்தி ஒப்புரவாகும்போது மட்டுமே துன்பங்கள்

நீங்குவதற்கான சூழ்நிலை உருவாகும். நமது தொடர் துன்பங்களுக்கு விடை தேவனுக்கு மட்டுமே தெரியும். ஆனாலும் தம்மை விசுவாசித்து தமக்கு பிரியமானவைகளை செய்ய விரும்பும் மக்களின் வாழ்க்கையில் காரணமில்லாமல் கஷ்டங்களை தேவன் தொடர விடுவதில்லை. இன்றும் அரசும், மருத்துவர்களும் நாம் பொறுப்போடு நடந்துகொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்கின்றனர். கட்டுப்பட்டு வாழ்வோமாயின் பொறுப்பு நிறைந்த வாழ்வு இழப்பை தடுப்பதாக அமையும் என்பதை நினைவில் கொள்வோம்.

**தேவை:-**

தேவனுக்கு விரோதமான செயல் எதுவும் நம்மிடம் இருப்பதில்லை. ஆனாலும் ஒருவேளை நாம் சில நல்ல ஆவிக்குரிய அனுபவங்களை பெறவேண்டிய தேவை இருக்கலாம். நமது குணத்திலும், சுபாவத்திலும் இன்னும் நல்ல பக்குவமுடையவர்களாக மாறவேண்டிய அவசியம் இருக்கலாம். நம்மிடம் போதிய அளவு தாழ்மை உருவாகாமலிருக்கலாம். நம்மிடம் சகிப்புத்தன்மையும், விட்டுக்கொடுக்கும் பண்பும் குறைவாயிருக்கலாம். ஆகவே நம்மை பக்குவப்படுத்தி தேவனுக்கு உகந்த பாத்திரமாக மாற்ற தேவன் துன்பங்களை உபயோகிக்க கூடும். எனவே நம்மிடம் இறைவன் விரும்பும் தேவையான மாற்றத்தை ஏற்படுத்த முயல்வோம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் யோபுவைபோல **"அவர் என்னை சோதித்த பின் சுத்த பொன்னாக விளங்குவேன்"** என்று நாமும் நம்பிக்கையோடு பேச பழகிக் கொள்வோம்.

அன்பானவர்களே! நீங்கள் தேவனுடைய ஆளுகைக்கு உட்பட்டு அவருடைய வழியில் நடக்கும்போது நம் துன்பங்களை தேவன் தம்முடைய நாமம் மகிமைப்படும்விதமாக பயன்படுத்துவார் என்பது உண்மை. ஒருவேளை நீங்களும் எதுவரைக்கும் இந்த துன்பங்கள் என்று கேட்பீர்களானால், **'அவருக்கு உகந்தவர்களாகவும், அவரது திட்டத்திற்கு ஏற்றவர்களாகவும் மாறும் வரை'** என்பதே தேவ சமூகத்தின் பதிலாக இருக்கும். ஆமென்! அல்லேலூயா!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## துக்கம் பகிர்வோம்

### கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் **Mr. Nalam Dimalson** அவர்களின் தாயார் **Mrs. Agnes Vasantha (Age 68)** அவர்கள் மே மாதம் 16-ம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். தங்கள் தாயாரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

நமது சபை அங்கத்தினர் **Mr. Ramji** அவர்களின் தந்தை **Mr. Raja Retnam (Age 62)** அவர்கள் மே மாதம் 26-ம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். தங்கள் தகப்பனாரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.


நமது சபை அங்கத்தினர் **Mr. Immanuel Prince (Age 41)** அவர்கள் ஜூன் மாதம் 3-ம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பை பெற்றார்கள். அவரை இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ ஜீன் 2021

| | | |
|---|---|---|
| 04-06-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Gracilin Melba Sujin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Bensam |
| 11-06-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Gracelin Rani Bensam |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Berin Raja |
| 18-06-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Miss. Jerlin Stelina Martin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Berkins |
| 25-06-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Jeya Rani Victor |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Bravin |
| 02-06-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Josphin Anto Kingston |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. David Sunder Singh |

## உண்மையான அர்ப்பணிப்பு

மண்ணில் : 21.05.1832
விண்ணில் : 03.06.1905
ஊர் : யார்க்ஷையர்
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : சீனா



சீன உள்நாட்டு மிஷன், ஹட்சன் டெய்லரின் தரிசனத்தால் உருவான மிஷனெரி ஸ்தாபனம். இளம் மிஷனெரிகளிடம் பேசுவதற்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார் ஹட்சன். சீனாவில் சிங்கியாய் மிஷன் வீட்டில் இக்கூட்டம் நடைபெற்றது.

அம்மிஷன் வீட்டின் அருகில் ஒரு கல்லறைத் தோட்டம், ஹட்சன் டெய்லர் பழைய நினைவுகளில் ஆழ்ந்தார். தனது அனபுக்குரிய மனைவியுடன் 4 குழந்தைகளும் அருகருகே புதைக்கப்பட்டிருந்தனர். ஒரு காலத்தில் மிகவும் துக்கமாக இருந்த சம்பவம் இப்பொழுது அவருக்கு இனிமையாயிருந்தது.

நீண்ட காலத்தை (உலகில்) மிஷனெரிப் பணியில் செலவு செய்துவிட்ட தானும் விரைவில் அவர்களோடு சேரப்போகும் எண்ணம் அவருக்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஹட்சன் அங்கிருந்த இளம் மிஷனெரிகளிடம் பேச ஆரம்பித்தார்.

“உங்களை இங்கு சந்திக்கும் பெரிய சிலாக்கியம் கிடைத்தது; என் மனைவி இங்கேயே மரித்தாள்; நான் விரும்பியவர்கள் இங்கே சமீபத்திலிருக்கிறார்கள்; கடவுளும் அருகிலிருக்கிறார். கர்த்தராகிய இயேசு ஒருபோதும் நம்மைவிட்டு விலகுவதுமில்லை, நம்மை கைவிடுவதுமில்லை. அவரில் சுகித்திருங்கள். என்னருமை நண்பர்களே! அவருக்கும் அவர் வார்த்தைக்கும் உண்மையாயிருங்கள். அவர் ஒருபோதும் உங்களை ஏமாற்றமாட்டார். நீங்கள் அடிக்கடி சோர்ந்து போகலாம்; அடிக்கடி தனிமையில் வாடலாம்; அப்போதெல்லாம் அவரை நோக்கிப் பாருங்கள்.”

30 வருடங்கள் சீன மக்களுக்காகவே உழைத்து நூற்றுக்கணக்கான மிஷனெரிகளை தெரிந்தெடுத்து சீனா முழுவதும் சுவிசேஷப் பணியைச் செய்தவரே ஹட்சன். கோடிக்கணக்கான மக்களைக் கிறிஸ்துவின் மந்தையில் சேர்த்தார். சீனாவின் தந்தை என்று அழைக்கப்பட்டார்.

அன்பரே! இழப்பிலும் ஆசீர்வாதம் உண்டு என்பதை அனுபவித்திருக்கிறீர்களா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:-** ஆ! எனக்கு நூறு வாழ்க்கையிருந்தால் அவை அத்தனையும் சீனாவுக்காகவே வாழ்ந்திருப்பேன் - ஹட்சன் டெய்லர்

**குயவனின் கரங்களில்:-** ஆண்டவரே! ஹட்சன் டெய்லரைப் போன்ற தியாகமுள்ள வாழ்வை எனக்குத் தாரும்.

**தியானத்திற்கு:-** யோசுவா 20-21, ஏசாயா 26-27, எபிரெயர் 10

## இரக்கமுள்ள இறைவன்




இரக்கம் என்பது ஆழமாக ஒரு மனிதனுடன் ஒன்றிப்போய் அவனுடைய துக்கங்களையும், அவனுடைய உணர்ச்சிகளையும் அறிந்து உதவுதல் ஆகும். மக்களின் துன்பங்களைப் பார்க்கும்பொழுது இயேசு மனம் இரங்கினார். இயேசுவின் இரக்கச் செயல்கள் பார்வையற்றவனை பார்வடையச் செய்தது. தொழு நோயாளியைக் குணமாக்கியது. இறந்தவனை உயிர்ப்பிக்கச் செய்தது. பசியுற்றோர்க்கு உணவளித்தது. இயேசுவின் இரக்கம் மனிதனுக்கு முழுமையை அளித்தது. பாவங்களை மன்னிப்பதில் இயேசுவின் இரக்ககுணம் வெளிப்பட்டதாக எபிரெயருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் (எபிரெயர் 2:17) பார்க்கிறோம். இயேசுவின் உயிர்த்தெழுதலால் இறைவன் தம் இரக்கத்திற்கேற்ப நமக்கு வற்றாத நம்பிக்கை தரும் புதுப்பிறப்பை அளித்தார் என்று பேதுருவின் கடிதத்தில் படிக்கின்றோம் (1பேதுரு 1:3).

யாருக்கு இந்த இரக்கம் வழங்கப்படுகிறது என்பதை திருமறை தெளிவுற காண்பிக்கின்றது. இரக்கமுள்ளோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவார்கள் (மத்தேயு 5:7). ஆண்டவர் தமக்கு அஞ்சுவோர் மீது இரங்குகிறார் (சங்கீதம் 103:13). எனவே இறை அச்சத்துடன் தீமைகளைவிட்டு விலகி பிறருக்கு செய்யும் உதவிகளின் வழியாக இரக்கத்தை வெளிப்படுத்தி கடவுளின் இரக்கத்தினை முழுமையாய் பெறுவோம். “உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள் (லூக்கா 6:36)”.

தலைசிறந்த பிரசங்கி என்று அழைக்கப்பட்ட ஸ்பர்ஜன் அனாதை இல்லம் ஒன்று நடத்தி வந்தார். ஒருமுறை பிரிஸ்டல் நகரில் மூன்று சிறிய

சபைகளில் அருளுரை ஆற்றி 300 பவுண்ட் கிடைத்தது. தன்னுடைய அனாதை இல்லத்தின் தேவைகளை நிறைவு செய்யலாம் என மகிழ்ச்சியுடன் வந்தார். அடுத்தநாள் ஜார்ஜ் முல்லர் நடத்திவந்த அனாதை இல்லத்திற்கு அவரைப் பார்க்கும்படி சென்றார். ஜார்ஜ் முல்லரிடம் கொடுத்துவிட்டார். பின்பு வீடு திரும்பினவுடனே அங்கே ஒரு கடிதம் இருந்தது. அதைப் பிரித்துப் பார்த்தபோது அதற்குள்ளே 315 பவுண்ட்கள் இருந்தன. நம் கடவுள் இரக்கமுடையவராய் இருப்பதுபோல நாமும் இரக்கமுள்ளவராய் இருக்கவேண்டும்.

- **V.G மஹிழா ஜெங்கின் ராஜ்**

## நிகழ்வும் பாடமும்



# பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 97

## ஜுன் 2021 மாத கேள்விகள்

### (2கொரிந்தியர் 11 முதல் கலாத்தியர் முடிய)

1. நீதிமான் எதனால் பிழைப்பான்?
2. ஆவிக்கென்று விதைக்கிறவன் எதை அறுப்பான்?
3. பவுல் பேதுருவிடம் எருசலேமுக்குப் போய் எத்தனை நாள் தங்கியிருந்தான்?
4. ஆவிக்கு விரோதமாக இச்சிப்பது எது?
5. ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரிப்பவன் யார்?
6. ஆகார் என்பது என்ன?
7. ஒருவனுக்குரியவன் அல்லாதவன் யார்?
8. தன்னிடத்திலுள்ள முள் நீங்கும்படி பவுல் எத்தனைமுறை கர்த்தரிடம் வேண்டினான்?
9. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் என்ன ஆவதில்லை?
10. பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணுவது எது?
11. ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறியப்பட்டவர்கள் யார்?
12. ஊன்றக்கட்ட அதிகாரம் கொடுத்தவர் யார்?
13. எதனால் கிரியை செய்கிற விசுவாசம் உதவும்?
14. தமஸ்கு பட்டணத்தை காவல்வைத்து காத்தவன் யார்?
15. விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கையளிக்கப்பட்டவன் யார்?
16. ஒருவரையொருவர் எவ்வாறு வாழ்த்தவேண்டும்?
17. எவன் சபிக்கப்பட்டவன்?
18. மாம்சத்தையும், ஆசை இச்சையையும் சிலுவையில் அறைந்தவர்கள் யார்?
19. பிள்ளைகளுக்கும், பொக்கிஷங்களை சேர்த்து வைக்கவேண்டியவர்கள் யார்?
20. நல்விஷயத்தில் எது பாராட்டுவது நல்லது?

## மே 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. தேவ வசனம் - எபேசியர் 6:17
2. பரலோகத்தில் - பிலிப்பியர் 3:20
3. தேவன் - எபேசியர் 2:4
4. சாவு – பிலிப்பியர் 1:21
5. பிசாசுக்கு – எபேசியர் 4:27
6. கர்த்தருக்கு சொந்தமானவர்கள் - எபிரெயர் 1:14
7. மனுஷர் - பிலிப்பியர் 2:7
8. இயேசு கிறிஸ்து – எபேசியர் 3:14,15
9. சாந்தகுணம் - பிலிப்பியர் 4:5
10. தெய்வ பயத்தோடே – எபேசியர் 5:21
11. எப்பாப்பிரோதீத்து – பிலிப்பியர் 2:25
12. கெட்டவார்த்தை – எபிரெயர் 4:29
13. பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே – பிலிப்பியர் 4:13
14. இலக்கை நோக்கி – பிலிப்பியர் 3:14
15. எரிச்சல் - எபேசியர் 4:26
16. கிறிஸ்து இயேசு – பிலிப்பியர் 2:5
17. பகையைச் சிலுவையினால் கொன்று – எபேசியர் 2:16
18. ஆவியின் கனி – எபேசியர் 5:9
19. பென்யமீன் - பிலிப்பியர் 3:5
20. பாத்திரவான்களாய் - எபேசியர் 2:1

## மே மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Mary Praveena Gobinath |
| Mrs. Aspin Bejo | Mrs. Nisha Rajan |
| Mrs. Boopathi Baskar | Mrs. Percy Jean |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Priyadarsini Kanagavel |
| Mrs. Felsi Rani John | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Shiney Johan |
| Mrs. Josephin Anto Kingston | Mrs. Thamari Johnson |
| Mrs. Juslin Jaslin | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Leela Gladson | Mrs. Virgin Jegatha Jino |

## ஜூன் 2021 மாத கேள்விகள்

### (ஏசாயா 31-40 முடிய)

1. பலாதானின் குமாரன் யார்?
2. நெரிந்த நாணல் கோல் எது?
3. வீரனுடைய பட்டயம் அல்லாத பட்டயத்தாலே விழுபவன் யார்?
4. ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படிக்குச் சொல்லியனுப்பினது யார்?
5. சுரூபத்தை வார்க்கிறவன் யார்?
6. யார் உதாரன் என்று சொல்லப்படுவதில்லை?
7. மானைப்போல் துள்ளிக் குதிப்பவன் யார்?
8. பண்டிகைகள் ஆசரிக்கப்படும் நகரம் எது?
9. பிளவையின்மேல் எதால் பற்றுப் போட்டனர்?
10. எத்தியோப்பியாவின் ராஜா யார்?
11. கர்த்தருக்கு ஒரு யாகம் எங்கே உண்டு?
12. ஸ்தானாபதிகளின் கையிலிருந்த நிருபத்தை வாங்கி வாசித்தது யார்?
13. வெட்டுக்கிளிகள் சேர்க்கிறதுபோல எது சேர்க்கப்படும்?
14. கர்த்தருடைய தூதன் அசீரியரின் பாளையத்தில் எத்தனைபேரை சங்கரித்தான்?
15. புஸ்தகச்சுருளைப்போல் சுருட்டப்படுவது எது?
16. சனகெரீப் யாரால் வெட்டிப்போடப்பட்டான்?
17. கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள் புதுப்பெலன் அடைந்து யாரைப்போல் செட்டைகளை அடிப்பார்கள்?
18. மேடும் துருக்கமும் எவைகளாகும்?
19. ஆசாப்பின் குமாரன் யார்?
20. பறந்து காக்கிற எதைப்போல சேனைகளின் கர்த்தர் ஆதரவாய் இருப்பார்?

## மே 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. எருக்களத்தில் - ஏசாயா 25:10
2. அசீரியன் - ஏசாயா 30:31
3. தீரு – ஏசாயா 23:15
4. எருதுகளும் கழுதைமறிகளும் - ஏசாயா 30:24
5. ஜாமக்காரன் - ஏசாயா 21:12
6. நியாயம், நீதி – ஏசாயா 28:17
7. எலியாக்கீம் - ஏசாயா 22:20
8. கண்ணியில் - ஏசாயா 24:18
9. எருசலேமிலுள்ள பரிசுத்த பர்வதத்தில் - ஏசாயா 27:13
10. செப்னா – ஏசாயா 22:15
11. கர்த்தராகிய யெகோவா – ஏசாயா 26:4
12. பட்சிக்கிற அக்கினிபோல் - ஏசாயா 30:27
13. வெயில் - ஏசாயா 25:5
14. தேமா தேசத்தின் குடிமக்கள் - ஏசாயா 21:4
15. எப்பிராயீமுடைய வெறியரின் - ஏசாயா 28:3
16. நீதிபரனுக்கு மகிமை – ஏசாயா 24:16
17. கர்த்தரின் சுவாசம் - ஏசாயா 30:33
18. சந்திரன், சூரியன் - ஏசாயா 24:23
19. தரிசனம் - ஏசாயா 29:11
20. போஜனபீடங்கள் - ஏசாயா 28:8

## மே மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Justus Martin |
| Mr. Anu | Mr. Kanagavel |
| Mr. Bejo Nelson | Mr. Lenin Raj |
| Mr. Daniel Raj P. | Mr. Prince J. P. |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Rajan V. N. |
| Mr. Jean C. R. Shibin | Mr. Ramesh R. |
| Mr. Jino John | Mr. Robin Devadhas |
| Mr. Johan Pratheep | Mr. Sujith Gladson |

# May God Bless All

## Birthday Celebrants – June 2021

| | |
|---|---|
| 01st June | Mr. Sheeju Johnson |
| 02ndJune | Master. Ronnie Robin Garwin, S/o Mr. Robin Raj |
| 02ndJune | Mr. Arunpaul |
| 02nd June | Mr. Winson |
| 03rd June | Mr. Isaac Solomon |
| 04th June | Mr. M. Sujin |
| 05th June | Miss. Shirley Suresh |
| 05th June | Miss. Felyn Dannah, D/o Mr. Immanuel Prince |
| 05th June | Master. N. Jan Godwin, S/o Mr. Nethaji Jacob Durai |
| 06th June | Mr. Anu |
| 06th June | Mrs. Geetha, W/o Rex Macedo |
| 09th June | Miss. Zionagen Mayshack, D/o Mr. Mayshack |
| 10th June | Mr. Kingsly |
| 10th June | Mrs. Aspin Mercilent Ethel, W/o Bejo |
| 12th June | Master. K. Allon Joshua, S/o Mr. Kanagavel |
| 13th June | Master. Afron Hanno S/o Mr. Ajin |
| 16th June | Miss. Struana Sujith, D/o Mr. Sujith Gladson |
| 17th June | Mr. Daniel Raj |
| 17th June | Mr. J. S. Emman Jasolin |
| 20th June | Miss. Praylin Mathney, D/o Mr. Anto Kingston |
| 21st June | Miss. Oshin Kingsly Paul, D/o Mr. Kingsly |
| 22nd June | Mrs. Sheeba Sujith, W/o Mr. Sujith Gladson |
| 22nd June | Mr. J. Robin Devadhas |
| 22nd June | Miss. Bernice Gabrilla, D/o Mr. Robin Devadhas |
| 23rd June | Miss. Sharona Maceka, D/o Mr. Mohan Babu |
| 27th June | Mrs. Sathya Priya, W/o Mr. R. Ramesh |
| 27th June | Mr. Herbert Goldston |
| 27th June | Mr. V.N. Rajan |

| | |
|---|---|
| 27th June | Mrs. Leela Gladson |
| 29th June | Mrs. Divya Darling, W/o Mr. Kasi Raja |
| 29th June | Mr. Vimal Kumar Stephen |

## Wedding Day Anniversaries – June 2021

| | |
|---|---|
| 07th June | Mr. Issac Solomon & Mrs. Eunice Beulah Suganthi |
| 08th June | Mr. Anu & Mrs. Rejeesha |
| 16th June | Mr. Atheesh Joy & Mrs. C. R. Nithya |
| 26th June | Mr. Moorthy & Mrs. Pushpa Rani |
| 28th June | Mr. Joel Gnanasekaran & Mrs. Ashika Sharon |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.

2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.

3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
    - ஓய்வுநாள் பள்ளி
    - பெண்கள் ஐக்கிய சங்கம்
    - ஆண்கள் ஐக்கிய சங்கம்
    - பாடகர் குழு
    - ஜெபக் குழு

    அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.

5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.
2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.
3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.
4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.
5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.
2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.
3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.

5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. **புதிதாக தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் மத சார்பின்மையோடு சிறப்பாக ஆட்சிபுரிய ஜெபிப்போம்.**

2. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.

3. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.

4. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.

5. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.

2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.

3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.
4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.
5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

## சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ் மற்றும உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இறைவேண்டல் குறிப்புகள்:-**

1. **“ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மேன்மைப்படுத்துவாய். சங். 50:15”** கஷ்ட நோய்ப்படுக்கையில் விடுதலைக்காய் கர்த்தரை நோக்கி மன்றாடும் ஒவ்வொரு இறைமக்களுக்காக இறைவேண்டல் புரிவோம். கோவிட்-19 நோய் அறிகுறியால் தனிமைப்படுத்தப்பட்டு உணவு பராமரிப்பு இல்லாமல் அழுது கொண்டிருக்கும் மக்களை அரசும், திருச்சபைகளும் அடையாளம் கண்டு ஆதரவு தரும்படியாய் இறைவேண்டல் புரிவோம். மிக விரைவாக மருந்து அனைத்து மக்களுக்கும் தரப்பட்டு நோய்தொற்று முற்றிலும் நீங்கும்படியாய் மரணத்தின் பிடியிலிருந்து மக்கள் காக்கப்படும்படியாய் இறைவேண்டல் புரிவோம்.

2. கோவிட்-19 என்னும் கொடும் நோய் கண்டு அஞ்சாமல் தங்கள் பணிகளை உண்மையாய் நிறைவேற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ உதவியாளவர்கள், சுகாதர துறை ஊழியர்கள், தூய்மை பணியாளர்கள், காவல்துறையினர் மற்றும் இப்பணியில் நேரிடையாக தங்களை இணைத்துள்ள அனைத்து ஊழியர்களுக்காகவும் இறைவேண்டல் புரிவோம்.

3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......

4. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....

குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்! இனிய வாழ்வு பெறுவோம்!!**

## அனுதின மன்னா – ஜூன் 2021

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜுன் 1 | செவ்வாய் | ஆதி. 1:1-12 | ஆதி. 1:1 | யோபு 35-38 |
| ஜுன் 2 | புதன் | ஆதி. 2:8-15 | ஆதி. 2:15 | யோபு 39-42 |
| ஜுன் 3 | வியாழன் | லேவி. 25:17-24 | லேவி. 25:19 | சங்கீதம் 1-7 |
| **ஜுன் 4** | **வெள்ளி** | **மத். 5:3-10** | **மத். 5:5** | **சங்கீதம் 8-14** |
| ஜுன் 5 | சனி | ஆதி. 1:26-31 | ஆதி. 1:28 | சங்கீதம் 15-18 |
| ஜுன் 6 | ஞாயிறு | 1இரா. 3:16-28 | 1இரா. 3:28 | சங்கீதம் 19-24 |
| ஜுன் 7 | திங்கள் | ஆதி. 30:34-43 | ஆதி. 30:43 | சங்கீதம் 25-30 |
| ஜுன் 8 | செவ்வாய் | ஆதி. 41:46-49 | ஆதி. 41:49 | சங்கீதம் 31-35 |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜுன் 9 | புதன் | மத். 6:25-35 | மத். 6:26 | சங்கீதம் 36-39 |
| ஜுன் 10 | வியாழன் | 2தெச. 3:6-12 | 2தெச. 3:8 | சங்கீதம் 40-45 |
| **ஜுன் 11** | **வெள்ளி** | **2கொரி. 8:1-7** | **2கொரி. 8:2** | **சங்கீதம் 46-50** |
| ஜுன் 12 | சனி | நியா. 6:11-16 | நியா. 6:11 | சங்கீதம் 51-57 |
| ஜுன் 13 | ஞாயிறு | வெளி 21:1-8 | வெளி 21:7 | சங்கீதம் 58-65 |
| ஜுன் 14 | திங்கள் | மாற். 4:35-41 | மாற். 4:39 | சங்கீதம் 66-69 |
| ஜுன் 15 | செவ்வாய் | ஆதி. 9:8-17 | ஆதி. 9:13 | சங்கீதம் 70-73 |
| ஜுன் 16 | புதன் | மீகா 4:1-4 | மீகா 4:4 | சங்கீதம் 74-77 |
| ஜுன் 17 | வியாழன் | ஆபகூக் 3:17-19 | ஆபகூக் 3:18 | சங்கீதம் 78-79 |
| **ஜுன் 18** | **வெள்ளி** | **லேவி. 25:4-13** | **லேவி. 25:13** | **சங்கீதம் 80-85** |
| ஜுன் 19 | சனி | ஆதி. 6:1-7 | ஆதி. 6:6 | சங்கீதம் 86-89 |
| ஜுன் 20 | ஞாயிறு | யோவா. 4:15-26 | யோவா. 4:24 | சங்கீதம் 90-95 |
| ஜுன் 21 | திங்கள் | ஆதி. 6:11-18 | ஆதி. 6:11 | சங். 96-102 |
| ஜுன் 22 | செவ்வாய் | மத். 12:1-8 | மத். 12:7 | சங். 103-105 |
| ஜுன் 23 | புதன் | உபா. 10:11-14 | உபா. 10:14 | சங். 106-107 |
| ஜுன் 24 | வியாழன் | ரோமர். 8:18-23 | ரோமர் 8:19 | சங். 108-114 |
| **ஜுன் 25** | **வெள்ளி** | **லூக். 8:5-15** | **லூக். 8:8** | **சங். 115-118** |
| ஜுன் 26 | சனி | மாற். 6:46-53 | மாற். 6:51 | சங்கீதம் 119 |
| ஜுன் 27 | ஞாயிறு | மாற். 10:35-45 | மாற். 10:45 | சங். 120-125 |
| ஜுன் 28 | திங்கள் | மத். 13:24-30 | மத். 13:30 | சங். 126-132 |
| ஜுன் 29 | செவ்வாய் | மத். 13:31-34 | மத். 13:32 | சங். 133-139 |
| ஜுன் 30 | புதன் | உபா. 26:1-11 | உபா. 26:10 | சங். 140-145 |
| ஜுலை 1 | வியாழன் | லேவி. 26:1-13 | லேவி. 26:9 | சங். 146-150 |
| **ஜுலை 2** | **வெள்ளி** | **யோசுவா 4:1-9** | **யோசுவா 4:7** | **நீதி. 1-3** |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**